**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 63/2021**

2026–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 23.01.2026 | | |
| பெயர்: | சிங்காரவேலன் (PW–1 Cross ) | தகப்பனார் பெயர்: | பரமசிவம் |
| கிராமம்: | செம்பதனிருப்பு | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 40/2026 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 23.01.2026</u>**
**(ஆரம்பித்த நேரம்–13.52)**

**1.** இந்த வழக்கானது நான் வெளிநாட்டில் இருந்த காரணத்தால் பொது அதிகார ஆவணம் மூலமாக பன்னீர் செல்வம் என்பவரால் எனது சார்பாக தாக்கல் செய்யப்பட்டது. தாவா சொத்துக்கள் ஏற்கனவே அமிர்தலிங்கம் என்பவருக்கு சொந்தமாக இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் அமிர்தலிங்கம் குடும்பத்திற்கு பூர்வீகமாக இருந்து பாகப்பிரிவினை மூலம் அமிர்தலிங்கத்திற்கு கிடைத்த சொத்துக்கள் என்றால் சரிதான்.

2. அதன்பிறகு அமிர்தலிங்கம் அவரது மகள் அருணா என்பவருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரிதான். தாவா சொத்தை நான் கடந்த 09.10.2017ல் கிரயம் பெறும்போது வெளிநாட்டில் இருந்தேன் என்றால் சரிதான். எனக்காக செல்வராஜ் என்பவருக்கு பொது அதிகார ஆவணம் கொடுக்கப்பட்டு, எனது பெயரில் வாங்கப்பட்டது. தாவா சொத்து அருணா என்பவரால் நேரடியாக எழுதிக்கொடுக்காமல் அவரது தாயார் தனலெட்சுமிக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டு அதன் மூலம் என்னுடைய அதிகார முகவர் செல்வராஜ் என்பவர் மூலமாக பெறப்பட்டது.

3. நான் வெளிநாட்டிலிருந்து சொத்து வாங்கிய தேதியிலிருந்து சுமார் 6 மாதங்கள் கழித்து சொந்த ஊருக்கு வந்தேன். நான் 6 மாதங்கள் கழித்து வரவில்லை என்றாலும், சுமார் 2,3 வருடங்கள் கழித்து தான் நான் ஊருக்கு வந்தேன் என்றாலும் சரியல்ல. நான் எப்போது ஊருக்கு வந்தேன் என்பதை காண்பிக்க எனது பாஸ்போர்ட்டை தாக்கல் செய்ய இயலும். அமிர்தலிங்கத்திற்கு தனலெட்சுமி 2வது மனைவி ஆவார்.

4. அமிர்தலிங்கத்தின் முதல் மனைவியின் மகன் தான் இந்த வழக்கின் பிரதிவாதி. தாவா சொத்துக்கள் அமிர்தலிங்கம் குடும்ப ஏற்பாட்டின்படி பிரதிவாதியிடம் கொடுக்கப்பட்டு பிரதிவாதி தான் தாவா சொத்துக்களில் பல ஆண்டுகளாக அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. கிரய ஆவணம், பட்டா, மோட்டார் மின் இணைப்பு பெயர் மாற்றம் ஆகியவை பெயரளவில்தான் ஆவணங்களின்படி ஏற்பட்டுள்ளது என்றாலும், உண்மையான வசமும் சுவாதீனமும் பிரதிவாதி வசம் தான் உள்ளது என்றாலும் சரியல்ல.

5. தாவா சொத்துக்களுக்கு காப்பீட்டுத் தொகை மற்றும் நிவாரணத் தொகை ஆகியவற்றை நான் பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும். நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் தாவா சொத்துக்களில் எனது அனுபவத்தையும் சுவாதீனத்தையும் காட்டக்கூடிய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ.5 ஆவணம் எனது செல்வாக்கின் அடிப்படையில் பெறப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எனக்கு உரிமையிருந்திருந்தால் வசப்பரிகாரம் தான் நான் கேட்க முடியும், உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம்– 14.09)**